மன்றப்பொருள்

2021 ம் ஆண்டு அக்டோபர் 29.10.2021 ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.ஜெ. இரவி**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (பொ) அவர்களின் அக்டோபர்–2021ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

2. பண்ணுருட்டி நகராட்சி, அலுவலகத்திற்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 31 7374க்கு காப்பீடு 2020–21 ஆம் ஆண்டிற்கு 29.11.2021 அன்று இரவுடன் முடிவடைகிறது. எனவ, மேற்கண்ட வாகனத்திக்கு 2021–22ஆம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பிக்க வேண்டியுள்ளதால் United India Insurance Company Limited என்ற நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற கூற்றின்படி காப்பீடுச் சான்று புதுப்பித்தல் கட்டணம் ரூ.11525/– (ரூபாய் பதினொன்ராயிரத்து ஐந்நூற்று இருபத்து ஐந்து மட்டும்) மேற்கண்ட நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய அவசியம் கருதி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: -1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் 2684/2021/இ1

3. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 சேர்மன் A மணி நகர் பகுதியில் புதியதாக 8 எண்ணிக்கையிலான LED தெருவிளக்குகள் அமைக்க புதியதாக மின்பாதை அமைக்க பண்ணுருட்டி நகர தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 20.9.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, மேற்கண்ட இடத்தில் புதிய மின்பாதை அமைக்க ரூ.114598/– தொகை செலுத்துமாறு தமிழ்நா மின்சார பார்வைக்கும் மேற்கண்ட தொகை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வங்கி வரைவோலையாக வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: -</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியாளர் அவசர அவசியம் கருதி முன்சான்று பெற்று தொகை வழங்கலாம்.

கோப்பு எண் 2731/2021/இ2

4. பண்ணுருட்டி நகராட்சி பொதுசுகாதார பிரிவு தமிழக அரசின் தலைமை செயலாளர் அவர்களின் நேர்முக கடிதம் எண் 1050/ந.தி. 5/2021 நாள் 18/9/2021, மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின் ஆய்வு கூட்டம் நள் 18.09.2021 மற்றும் நகரட்சி நிர்வக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுறை நள் 18.09.2021 மற்றும் நகரட்சி நிர்வக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் அறிவுரைபடியும் வரும் 2021–ம் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு நகரட்சியில் உள்ள 33–வார்டுகளிலும் மழைநீர் வடிால்களை தூர்வாரும் பொட்டு பணிகளை உடனடியாக துவக்க உத்திரவிட்டு உள்ளனர். இந்நிலையில் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு JCB வாகனம் TN31H8253 டயர்கள் (ம) டியூப் பழுது அடைந்துள்ளது, மிகவும் மோசமான நிலையில் உள்ள மேற்கண்ட வாகனத்தின் டயர், டியூபகள் கடந்த 2014–ம் ஆண்டு வாங்கப்பட்டு ஏழு ஆண்டுகள் மேலக உள்ளது. இவ்வகனம் தொடரந்து நகராட்சி உரக்கிடங்கில் குப்பைகளை சமன் செய்யும் பணி (ம) கால்வாய் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தது. அதனால் கண்ணாடி ஓடகள், இருப்பு கம்பிகள் ஆகியவற்றின் மூலம் டயர்கள் மிகவும் பழுது அடைந்துள்ளது. அதனை ரீ பட்டன் செய்து உபயேகப்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் பொதுசுகாதார பிரிவில் வடகிழக்கு பருவமழையின் அவசர அவசியம் கருதி அதன் JCB தயாரிப்பு நிறுவனம் அல்லது தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920–பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளிப் பெற்று புதிய டயர், டியூப்புகள் வாங்கியதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பின்னேற்புக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-1.</u>** மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியாளர் அவசர அவசியம் கருதி முன்சான்று பெற்று தொகை வழங்கலாம்.

கோப்பு எண் 1206/2021/எச்1

5. பண்ணுருட்டி நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2020–21ன் கீழ் வார்டு எண்.21, போலிஸ் லைன் 7வது தெரு வார்டு–பி, பிளாக்–17 நில அளவை எண்–69ல் அமைந்துள்ள வீரட்டலிங்கம் மனைப்பிரிவு பூங்கா பகுதியில் சுற்றுசுவர், நடைபாதை, விளையாட்டு சாதனங்கள், கழிவறை, தண்ணீர் வசதி மற்று புல்வெளி அமைத்து பொது மக்கள் மற்றும் சிறுவர்களின் பயன்பாட்டிற்கு புதியதாக பூங்கா அமைக்க ரூ.48.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை நிலை எண்90 நாள்.27.10.2021ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்டகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:- 1.</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க. எண் 2296/2021/இ1

6. பண்ணுருட்டி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு A பிளக்–33 நகரளவு எண் 20/1 ஆகியவற்றில் 1.33 ஏக்கர் 5334 ச.மீ பரப்பளவை கொண்ட ஸ்ரீ சாய்பாபா நகர் என்ற பெயரில் காலிமனை வரிவிதிக்க கணினியில் மேற்படி மனைபிரிவை வார்டு–28ல் பிரிவு Bல் பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:- 1.</u>** நகர் ஊரமைப்பு உதவி இயக்நர் அவர்களின் ந.க.எண்.408/2021 நாள் 08.06.2021

2.நகரமைப்பு ஆய்வரின் கூடுதல் பொறுப்பு அவர்களின் குறிப்பு நாள் 29.10.2021

3. ஸ்ரீ சாய்பாபா நகர் மனைப்பிரிவில் கணினியில் பெயர் சேர்க்கலாம்.

| **வீட்டுவரி** | **கலிமனை வரி** |
|---|---|
| வார்டு 28 | வார்டு 28 |
| ஸ்ரீ சாய்பாபா நகர் | ஸ்ரீ சாய்பாபா நகர் |
| மண்டலம் B | மண்டலம் B |
| பகுதி நகராட்சி அலுவலகம் | பகுதி நகராட்சி அலுவலகம் |
| வட்டாரப்பகுதி தட்டாஞ்சாவடி | வட்டாரப்பகுதி தட்டாஞ்சாவடி |

கோப்பு எண் 1380/2021/எப்1

7. இந்நகராட்சியில் வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பண்ணுருட்டி நகராட்சிகிக்கு உட்பட்ட வார்டு பகுதியில் உருவாகும் மழைநீர் வார்டுகளில் உள்ள கால்வயில் இருந்து வரப்பெறும் அனைத்து நீர்களும் வலாஜா வாய்யக்கால் மூலம் வழிந்தோட வேண்டிய சூழல் உள்ளது. இந்நிலையில் வலாஜா வாய்க்காலில் புல், பூண்டு, மரம், செடி, கொடிகள், கோரைப்புல் ஆக்கிரமித்து மழைநீர் வழிந்தோடுவதில் தேக்கம் ஏற்பட்டு பொது சுகாதாராப்பணிகள் பாதிக்கப்படுகிறது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி பொதுமக்களின் நலன் கருதியும் வாலாஜா வாய்க்கால் சுத்தம் செய்ய வேண்டியுள்ளதால் அதன் (வாய்க்கால்) ஆரம்ப பகுதியன வார்டு எண் 1 ஆண்டிக்குப்பம் முதல் வார்டு–2 விழமங்கலம் பகுதி, வார்டு–3 விழமங்கலம் பகுதி, வார்டு–3 விழமங்கலம் காலனி வழியாக வார்டு எண்–5ன் வழியாகவும் வார்டு எண் 8,9,10,11 வார்டு எண்.15,16–ன் ஆகிய வார்டுகளின் வழியாக மழைநீரை அப்புறப்படுத்தும் விதமக திருவதிகை பகுதியுடன் வாலாஜா வாய்க்கால் முடிவடைவதால் மேற்படி வாய்க்கால் முழுவதும் சுத்தம் செய்திட வேண்டியுள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும் பொது மழை காலத்தில் உருவாகும் தண்ணீர் தேக்கமின்றி சென்றிட வாலாஜா வாய்க்கால் சுத்தம் செய்யும் பணி நகர்மன்ற தீர்மான எண்.743 நாள்.30.07.2021 அன்று நிர்வாக அனுமதி வழங்கி உள்ளதற்கிணங்க 27.08.2021–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எ** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு)** |
|---|---|---|---|
| 1 | M.K.ஜோதிமணி 6,சேடர் தெரு, குறிஞ்சிப்பாடி | 9.00 | 1625 (ஒரு மணி நேரத்திற்கு) மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | எஸ்.இ.டி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், 4,வள்ளியம்மை நகர், கடலூார் | 9.00 | 1725(ஒரு மணி நேரத்திற்கு) மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M.K.ஜோதிமணி 6, சேடர் தெரு, குறிஞ்சிப்பாடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை குறைவக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண் 1206/2021/எச்1

8. ஜல்ஜீவன் மிஷன் (JJM) திட்டத்தின் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஒவ்வொரு குடிமக்களுக்கும் நாள் ஒன்றுக்கு 135 LPCD குடிநீர் வழங்க திட்டவரைபடம் AUTOCAD Software மூலம தயாரித்து Printout எடுத்து நகராட்சி நிர்வாகக ஆணையத்தில் சமர்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/–க் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு: 1.</u> மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

ந.க. எண் 2341/2021/இ2

9. கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவின் பேரில் காலியிடத்தில் தினக்கூலி பணியாளர்களை நியமித்து கொள்ளலாம். அதன் அடிப்படையில் மேற்கண்ட உத்திரவில் வ.எண்.26ல் ஒரு நாள் சம்பளம் ரூ.505/– வீதம் சம்பளம் வழங்கலம் என உத்திரவின் பேரில் இந்நகராட்சிக்கு தேர்தல் பணி மற்றும் அலுவலக பணி அதிகமாக உள்ளதால் தட்டச்சர் பயிற்சி முடித்த ஒரு நபர் இந்நகராட்சிக்கு தேவைப்படுவதால் தினகூலி அடிப்படையில் ஒருவரை 90 நாட்களுக்கு நியமித்து கொள்ள மன்ற ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு: 1.</u> தட்டச்சர் பணிக்கு வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி மூலம் (அ) ஒப்பந்ததாரர்கள் இப்பணியை மேற்கொள்ளலாம்.

ந.க. எண் 2545/2021/அ1

10 பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எ, பிளாக் 33, நகரளவு எண்.20/1, 1,33 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைபிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, கடலூர் மாவட்டம் அவர்களின் செயல்முறையின் ந.க.எண்.408/2021, நாள் 08.06.2021 ஒப்புதலுடன் இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள மனுவை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

பண்ணுருட்டி நகரரட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எ, பிளாக் 33, நகரளவு எண். 20/1, 1.33 ஏக்கர் பரப்பளவில் குடியிருக்கும் மனைப் பிரிவிற்கு ஒப்புதலுக்காக இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. மேலும் சாலை வசதி மழைநீர் வடிகால் வசதி, தெரு விளக்குகள் , சிறு பாலங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ளஇம்மனைப் பிரிவிற்கு தேவையான அடிப்படை வசதி கட்டணங்கள் ரூ.25,86,000/– 06.10.2021 நாளில், பற்றுச் சீட்டு 095/001/1/21–22/0007860 நகராட்சி கரூவூலத்தில் பொறியாளரின் ஆலோசனைபேரில் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரமைப்பு பிரிவுக்கான கட்டணங்கள் 21.10.2021 நாளில் செலுத்த அறிவிப்பு வழங்கி, அவ்வறிவிப்பின்பேரில் கட்டணங்கள் ரூ.31,500/– 21.10.2021 அன்று செலுத்தி பற்றுச் சீட்டு எண்.095/001/21–22/0008739 செலுத்தப்பட்டன. நகராட்சிக்கு சாலைகள் மற்றும் குடிநீர் தொட்டி கட்டுவதற்கான இடங்கள் தானமாக பத்திர எண்.1834/2021 நாள் 08.07.2021 தாள் 1 முதல் 27 வரை அசல் ஆவணங்கள் மனைப் பிரிவுதாரரால் நகராட்சி ஆணையருக்கு பத்திரம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மனைப் பிரிவுதாரர் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சி ஆணையர் பெயருக்கு மனைப் பிரிவுதாரர் திரு. வடமலை என்பவர் சொந்த செலவில் பட்டா மாற்றம் செய்து நகராட்சிக்கு சமர்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைபேரில் மனை பிரிவினை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1380 /2021/எப்.1**

11. பண்ணுட்டி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள், A4 பேப்பர், பென் டிரைவ், டோனர் வாங்கியமைக்கு 6th SFC புக் நான்கு செட் ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.20,465/–யை வருவாய் நிதி கணக்கிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் முன் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண்.2636 /2021/பி1)

12. பண்ணுட்டி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான 34 வகையான பதிவேடுகள் மற்றும் A4 பேப்பர், Legal பேப்பர் மூடுதாள், பேருந்து நிலைய கழிவறை கட்டண டோக்கன், அம்மா உணவக டோக்கன் மற்றும் ஸ்டேட்னரி பொருட்கள் கோவில்பட்டி தொழில் கூட்டுறவு அச்சகம் அவர்களிடமிருந்து வாங்கப்பட்டுள்ளது. அதற்கான தொகை வழங்க கோரி ரூ.3,99,278/—க்கு பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகைகைய வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண்.2639 /2021/பி1)

13. பண்ணுட்டி நகராட்சியில் 2021—22ம் ஆண்டு 1.04.2021 முதல் 31.3.2022 வரையிலான நான்கு காலாண்டுகளுக்கு ஒப்பந்த பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகையினை வருமான வரித் துறைக்கான வலைதளத்தில் வருமான வரி கணக்கில் பதிவு ஏற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் வங்கி வருமான வரி கணக்குடன் ஒப்பிட்டு சரி செய்து (E-Filing) செய்ய தோராய செலவினம் தொகை ரூ.1,20,000/— நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண்.2594/17/பி1)

14. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் உள்ள பகுதிகளில் எதிர்வரும் 2021 பருவமழை காலங்களில் பொழியும் மழைநீர் தாழ்வான பகுதிகளில் தேங்குவதை தடுக்க JCB இயந்திரம் வாடகை முறையில் அமர்த்தவும் மழை காலங்களில் மின் துண்டிப்பு ஏற்படும் நேரங்களில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய வாடகை முறையில் Genset அமைக்கவும் நிவாரணமுகாம்களில் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு நகரமன்றம் எண்.763 நாள்.31.08.2021 அன்று அனுமதி வழங்கியுள்ளதற்கிணங்க 26.10.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பிடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | திரு. M.K. ஜோதிமணி ஒப்பந்ததாரர், குறிஞ்சிபாடி | 3.00 | 0.25 % குறைவு |
| 2 | திரு.V. சுரேஷ்பாபு ஒப்பந்ததாரர், கடலூர் | 3.00 | 0.02 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> — 1.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M. k. ஜோதிமணி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.25% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2. முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். 2019/2021/இ1

15. பண்ணுருட்டி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள ஏதுவாக 1. தமிழகஅரசு தலைமை செயலாளர் அவர்களின் நேர்முக கடிதம் எண். 21050/ந.நி.5/2021 நாள்.18.09.21 2. மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டநாள்.18.09.2021 3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரை நாள்.18.09.21 4. நகராட்சி பொறியாளர், துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பு நாள். 28.09.21 நகராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால் வாய்க்கால் தூய்மை செய்யும் பணிக்கும் மற்றும் சுகாதார பணிக்கும் பொது சுகாதார பிரிவில் உள்ள முக்கிய சாலைகள் முறையே சென்னை சாலை, கும்பகோணம் சாலை, கடலூர் மெயின் ரோடு, இந்திரா காந்தி சாலை, லிங்க் ரோடு, காந்தி ரோடு, பாலூர் ரோடு மற்றும் திருவதிகை பகுதிகளில் உள்ள பெரிய கால்வாய்களை உடனடியாக தூர்வார தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1980 பிரிவு 15ன்கீழ் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. சுரேஷ்பாபு அவர்களின் விலைப்புள்ளி நாள். 18.09.2021 ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோ.எண். 1206/2021 /எச்1**

16. பண்ணுருட்டி நகராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்ட பட்டியலில் உள்ள புதியதாக உருவாக்கப்பட்ட தெருக்கள் நகராட்சி சொத்துவரி பதிவேட்டில் கணினியில் உருவாக்கப்படாமல் உள்ளது. அதனால் மேற்படி பட்டியலில் உள்ள ருெக்களில் உள்ள வீடுகளுக்கும் வணிகத்திற்கும் மற்றும் காலியிடங்களக்கம் வரிவிதிப்பு செய்ய முடிாமல் பக்கத்தில் உள்ள தெருக்களின் வரிவிதிப்பை பதிவேற்றம் செய்யப்படும் சூழ்நிலை உள்ளதால் தெருக்களில் உள்ள வீடு வைத்திருக்கும் நபர்களுக்கு கட்டிட உரிமம் பெறமுடியாமல் உள்ளது. எனவே கீழ்கண்ட வார்டுகளில் உள்ள தெருக்கனை பட்டியலில் சேர்த்து கணினியில் பதிவேற்றம் செய்ய பணிவுடன் கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | சொத்துவரி பகுதி | VLT பகுதி |
|---|---|---|---|---|
| 1 | 9 | R.I. கண்ணன் நகர் | B Zone | B Zone |
| 2 | 19 | ஏரிமேடு தர்கா | C Zone | A Zone |
| 3 | 17 | ஸ்ரீஆஞ்சநேய சுவாமி நகர் | B Zone | B Zone |
| 4 | 17 | பஜனைமட பூந்தோட்டம் | B Zone | B Zone |
| 5 | 17 | வானவில் நகர் | B Zone | B Zone |
| 6 | 28 | G.K. மூப்பனார் நகர் EXT–1 | B Zone | B Zone |
| 7 | 28 | விஸ்வநாதன் நகர் விரிவு | B Zone | B Zone |
| 8 | 28 | ஸ்ரீசாய்பாபா நகர் | B Zone | B Zone |
| 9 | 28 | மலர்வேணி நகர் | B Zone | B Zone |
| 10 | 19 | ரத்தினம் லே அவுட் | B Zone | B Zone |

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்
கோ. எண். 2545/2021/அ1

17. இந்நகராட்சி எல்லைக்குள் இருக்கும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள தரைக்கடை எண்.49க்கு (வ.வி.எண்.095/511க்கு) கணினியில் ஏப்ரல் 2018–19 முதல் நவம்பர் 2018–19 வரைகேட்பு இரண்டுமுறை பதிவேற்றம் செய்யப்பட்டதை திரு. பி. சக்திவேல் கடை குத்தகைதாரர் இரண்டு முறை பணம் செலுத்தப்பட்டதை ரூ. 9344/– (ஒன்பது ஆயிரத்து முன்னூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) மனுதாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மனுதாரருக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.9344/–ஐ வருவாய் நிதியிலிருந்து வழங்கலாம்.

18. இந்நகராட்சி எல்லைக்குள் இருக்கும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள தரைக்கடை எண்.32க்கு (வ.வி.எண்.095/355க்கு) இரண்டு முறை பணம் செலுத்தப்பட்டுள்ளார். (2017–18 முதல் 2019–20) மேலும் 2019–2020 ஆகஸ்ட் வரை திரும்ப கணினியில் நீக்கம் செய்யவும் மேலும் மனுதாரரான திருமதி அ. வசந்தி க/பெ. அன்புமுருகன் அவர்களுக்கு இரண்டு முறை கணினியில் ஏற்றப்பட்டதை மேற்கண்ட விண்ணபதாரருக்கு ரூ.9440/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மனுதாரருக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.9440/–ஐ வருவாய் நிதியிலிருந்து வழங்கலாம்.

கோ. எண். 2408/2021/அ1

19. இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மின் மோட்டார் அறைகளை பழுதுநீக்கம் மற்றும் மேற்கண்ட இடத்தின் உட்புறம் உள்ள மீட்டர் போர்டு , பேனல் போர்டு, பியூஸ் கேரியர், ஸ்டார்ட்டர் மற்றும் சர்வீஸ் ஒயர் ஆகியவற்றை பராமரிக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 786 நாள். 31.08.2021 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 26.10.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பிடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ். ஜெயராமன் பண்ணுருட்டி | 2.00 | 0.25 % குறைவு |
| 2 | திருமதி.எஸ். சரஸ்வதி பண்ணுருட்டி | 2.00 | 2.68 % அதிகம் |

அலுவலக குறிப்பு – வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ். ஜெயராமன், பண்ணுருட்டி ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.25% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

20. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 போலீஸ் லைன் பகுதி மற்றும் தண்டுபாளையம் பகுதியில் மழைநீர் வடிகால் வசதி அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 780 நாள். 31.08.2021 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 26.10.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பிடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ். சரஸ்வதி பண்ணுருட்டி | 4.85 | 0.11 % குறைவு |
| 2 | திரு. செந்தில்குமார் | 4.85 | 0.50 % அதிகம் |

அலுவலக குறிப்பு – வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. சரஸ்வதி க/பெ. நடராஜன் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.11% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். 2020/2021/இ1

21. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17 நேதாஜி நகர் பகுதியில் பழுதடைந்த சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகாலை அகற்றி புதியதாக சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 781 நாள். 31.08.2021 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 26.10.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பிடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | திருமதி. சுகுணாதேவி கடலூர் | 5.00 | 0.10 % குறைவு |
| 2 | திரு. செந்தில்குமார் பண்ணுருட்டி | 5.00 | 0.31 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u> –** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. சுகுணாதேவி, கடலூர் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.10% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். 2295 /2021/இ1

22. இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு 4 x40 வாட்ஸ் குழல் விளக்கு உதிரிபாகங்கள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகளுக்கு உதிரிபாகங்கள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகளுக்கு உதிரிபாகங்கள் வாங்க வழங்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 784 நாள். 31.08.2021 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 26.10.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பிடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | திருமதி. N. சரஸ்வதி பண்ணுருட்டி | 3.00 | 2.03 % அதிகம் |
| 2 | திரு. எஸ். ஜெயராமன் பண்ணுருட்டி | 3.00 | 0.37 % குறைவு |

**<u>அலுவலக குறிப்பு</u> –** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ். ஜெயராமன், பண்ணுருட்டி ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.37% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். 2080 /2021/இ1

23. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 வி. ஆண்டிக்குப்பம் பகுதியில் உள்ள சிதிலமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள நீர்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 785 நாள். 31.08.2021 அன்று அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 26.10.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பிடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். ஜெயராமன் பண்ணுருட்டி | 1.15 | 0.20 % குறைவு |
| 2 | திருமதி. N. சரஸ்வதி பண்ணுருட்டி | 1.15 | 0.56 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u> –** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ். ஜெயராமன், பண்ணுருட்டி ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.20% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். 1520 /2021/இ1

24. பண்ருட்டி நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் அவர்களின் கணக்கில் உள்ள தொகைக்கு கடன் கோருபவர்களுக்கு அவர்கள் கணக்கிலிருந்து தொகை வழங்கவும் மற்றும் சிறப்பு சேமநல நிதியின் கீழ் வரும் பணியாளர்கள் வயது முதிர்வு காரணமாக பணி ஓய்வு பெரும் காலத்தில் அன்னாரின் கணக்கில் உள்ள தொகையினை சரிபார்த்து கணக்கு முடித்து தொகை வழங்கவும். அதற்கான வட்டித்தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அ.கு– 1. மன்றம் அனுமதிக்கலம்

2. பணியாளர்களின் நலன் கருதி வட்டித்தொகையைபொதுநிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இடம்– பண்ணுருட்டி நகராட்சி
நாள் – 29–10–2021

தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பண்ணுருட்டி நகராட்சி.